


08.07.2024

## தலைப்புச் செய்திகள்

1. ரஷ்யா - ஆஸ்திரியா நாடுகளுடனான நட்புறவை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. இளநிலை மருத்துவ பாடபிரிவுகளுக்கான நீட் நுழைவு தேர்வு தொடர்பான வழக்கு விசாரணை உச்சநீதிமன்றத்தில் இன்று பிற்பகல் தொடர்கிறது.

3. ஜார்கண்ட் சட்டப்பேரவையில் ஹேமந்த் சோரன் அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றிபெற்றுள்ளது.

4. வண்டல் மண், களிமண்ணை கட்டணமின்றி பயன்படுத்துவதற்கான அனுமதி ஆணைகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் பயனாளிகளுக்கு இன்று வழங்கினார்.

5. விக்கிரவாண்டியில் நாளை மறுநாள் நடைபெறும் இடைத்தேர்தலுக்கான பிரச்சாரம் இன்றுமாலையுடன் ஓய்கிறது.

## இனி விரிவான செய்திகள்

ழுழுழுழுழுழுழுழுழு

**பிரதமர்**

ரஷ்யா - ஆஸ்திரியா நாடுகளுடனான நட்புறவை வலுப்படுத்த, தமக்கு சிறப்பான வாய்ப்பு கிடைத்திருப்பதாக, பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்திருக்கிறார்.

ரஷ்யா – ஆஸ்திரியா நாடுகளுக்கு 3 நாள் அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர், புறப்படுவதற்கு முன்னர், தமது சமூக வலைதளபதிவில் வெளியிட்டுள்ள செய்தியில், இருநாடுகளில் உள்ள இந்திய

வம்சாவளியினரை, சந்தித்து உரையாடுவதை ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாக குறிப்பிட்டார்.

ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் நடைபெறும் 22ஆவது வருடாந்திர உச்சிமாநாட்டில் பங்கேற்க இருப்பதை சுட்டிக்காட்டிய அவர், இருதரப்பு ஒத்துழைப்பு அனைத்து நிலைகளிலும் முன்னெடுத்துச்செல்லப்படும் என்றார்.

எரிசக்தி, பாதுகாப்பு, வர்த்தகம், முதலீடு, சுகாதாரம், கல்வி, கலாச்சாரம், சுற்றுலா, மக்கள் பரிவர்த்தனை உள்ளிட்ட பிரிவுகளில் இந்தியா ரஷ்யா இடையிலான ஒத்துழைப்பை பிரதமர் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவின் சிறந்த வலுவான நட்புறவு நாடாக ஆஸ்திரியா திகழ்வதாக கூறிய பிரதமர், ஜனநாயகம் மற்றும் பன்முக தண்மையில் இருநாடுகளின் பங்களிப்பை எடுத்துரைத்தார்.

ஆஸ்திரிய அதிபர் **அலெக்ஸாண்டர் வேண்டர் பெலன்** மற்றும் அந்நாட்டின் தலைவர் கார்ல் நெஹமரை தாம் சந்தித்து பேச இருப்பதாக குறிப்பிட்டார்.

இருநாடுகளுக்கிடையிலான படைப்பாற்றல் திறன் தொழில்நுட்பம், நீடித்த வளர்ச்சி உள்ளிட்டவற்றை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச்செல்வது குறித்து பிரதமர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

தமது ஆஸ்திரிய பயணத்தின்போது அங்குள்ள தொழிலதிபர்களை சந்தித்து பேசுவதோடு பரஸ்பர வர்த்தகம் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து ஆய்வு செய்யப்படும் என்று பிரதமர் தெரிவித்தார்.

கடந்த 40 ஆண்டுகளில் முதல்முறையாக இந்திய பிரதமர் ஆஸ்திரியா செல்வது குறிப்பிடத்தக்கது.

ழுழுழுழுழுழுழுழுழு

**உச்சநீதிமன்றம்**

இளநிலை மருத்துவ பாடபிரிவுகளுக்கான நீட் நுழைவு தேர்வில் முறைகேடுகள் நடைபெற்றதாக கூறி புதிய தேர்வு நடத்த வேண்டும் என்று கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணையை உச்சநீதிமன்றம் இன்று பிற்பகலுக்கு ஒத்திவைத்தது.

நீட் தேர்வு தொடர்பாக மாணாக்கர் தாக்கல் செய்துள்ள மனுவில் நீட் முறைகேடுகள் குறித்து விசாரிக்க சிறப்பு புலனாய்வுகள் நடத்தப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது,

முன்னதாக உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் மறுதேர்வு நடத்த வேண்டிய தேவை இல்லை என்று மத்திய அரசும் தேசிய தேர்வு முகமையும் உச்சநீதிமன்றத்தில் பிரமான வாக்கு மூலத்தை தாக்கல் செய்திருந்தது.

நீட்தேர்வை மீண்டும் நடத்துவதால் நேர்மையாக தேர்வெழுதிய மாணாக்கர் பாதிக்கப்படுவார்கள் என்றும் அரசு சுட்டிக்காட்டியிருந்தது.

இந்நிலையில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி னு.லு சந்திரசூட் தலைமையிலான அமர்வு இதுதொடர்பான விசாரணையை இன்று பிற்பகல் எடுத்துக்கொள்கிறது.

**இதனிடையே பெண் ஊழியர்களுக்கு** மாதவிடாய் விடுமுறை வழங்குவது தொடர்பாக, மாநிலங்கள் மற்றும் அனைத்து தரப்பினரையும் கலந்தாலோசித்து மாதிரி கொள்கை ஒன்றை வகுக்க உச்சநீதிமன்றம் மத்திய அரசை அறிவுறுத்தியுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழு

**ஹேமந்த் சோரன்**

ஜார்கண்ட் சட்டப்பேரவையில் ஹேமந்த் சோரன் அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றிபெற்றுள்ளது.

நம்பிக்கை வாக்கெடுப்பிற்கு ஆதரவாக 45 ஜார்கண்ட் முக்தி மோர்சா தலைமையிலான கூட்டணி உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

முன்னதாக சட்டப்பேரவையில் இன்று திரு.ஹேமந்த் சோரன் தமது அரசு மீது நம்பிக்கை கோரும் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

வாக்கெடுப்பின்போது எதிர்கட்சிகள் சோரன் அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பி அமளியில் ஈடுபட்டனர்.

நம்பிக்கை வாக்கெடுப்பிற்கு பின்னர் சட்டப்பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

நில முறைகேடுகள் தொடர்பான வழக்கில் திரு.ஹேமந்த் சோரனுக்கு ஜாமீன் வழங்கப்பட்ட நிலையில் கடந்த 4ஆம் தேதி அவர் ஜார்கண்ட் மாநில முதலமைச்சராக மீண்டும் பதவி ஏற்றார்.

அம்மாநிலத்தில் புதிய அமைச்சர்கள் இன்று பிற்பகல் பதவி ஏற்பார்கள் என தெரிகிறது.

ழுழுழுழுழுழுழுழுழு

**முதலமைச்சர்**

நீர்வளத்துறை, ஊரக வளர்ச்சி, ஊராட்சி துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஏரி, குளம் கன்மாய்களிலிருந்து வண்டல் மண், களிமண் ஆகியவற்றை கட்டணமின்றி பயன்படுத்துவதற்கான அனுமதி ஆணைகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் பயனாளிகளுக்கு இன்று வழங்கினார்.

இந்த திட்டத்தின் கீழ் காஞ்சிபுரம் மாவட்டத்தை சேர்ந்த 10 விவசாயிகள் மற்றும் மண்பாண்டம் செய்பவர்களுக்கும் அனுமதி ஆணைகளை வழங்கி இந்த திட்டத்தை முதலமைச்சர் தொடங்கிவைத்தார்.

இதன்படி வேளாண் பெருமக்களும், மண்பாண்ட தொழில்புரிவோரும், வநெளநஎயஅ.வெ.பழஎ.வை இணையதளம் வாயிலாக விண்ணப்பித்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்நிலையில் கள்ளக்குறிச்சி, நாமக்கல், சிவகங்கை உள்ளிட்ட மாவட்டங்களில் விவசாயிகள் இணையதளம் வாயிலாக இதற்கு விண்ணப்பித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

ழுழுழுழுழுழுழுழுழு

**விக்கிரவாண்டி**

தமிழ்நாட்டில் விக்கிரவாண்டி உட்பட பஞ்சாப், மத்திய பிரதேசம், பீஹார், உத்தரகாண்ட், ஹமாச்சல பிரதேசம், மேற்கு வங்கம் ஆகிய 7 மாநிலங்களில் காலியாக உள்ள 13 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு நாளை மறுநாள் நடைபெற உள்ள இடைத்தேர்தலுக்கான பிரச்சாரம் இன்றுமாலையுடன் நிறைவடைகிறது.

பஞ்சாப், மத்திய பிரதேசம், பீஹாரில் தலா ஒரு தொகுதியிலும்,

உத்தரகாண்டில் 2 தொகுதிகளிலும்,

ஹமாச்சல பிரதேசத்தில் மூன்றிலும்,

மேற்கு வங்கத்தில் 4 தொகுதிகளிலும் இந்த இடைத்தேர்தல் நடைபெறுகிறது

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் இன்று மாலை பிரச்சாரம் நிறைவடைவதால் அரசியல் தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

திமுக உறுப்பினர் புகழேந்தி உடநலக் குறைவால் காலமானதால் இத்தொகுதிக்கு இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

இத்தொகுதியில் திமுகவின் திரு. அன்னியூர் சிவா,

பா.ம.க. பி.ஜே.பி கூட்டணி சார்பாக திரு. அன்புமணி,

நாம் தமிழர் கட்சியின் டாக்டர் அபிநயா உட்பட 29 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

அஇஅதிமுக, தேமுதிக உள்ளிட்டவை இந்த தேர்தலை புறக்கணித்துள்ளன.

இடைத்தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை வரும் 13-ம் தேதி நடைபெறும்.

ழுழுழுழுழுழுழுழுழு

**கூடங்குளம்**

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் 2ஆவது அணுஉலையில் மின் உற்பத்தி இன்று அதிகாலை மீண்டும் தொடங்கியது.

வருடாந்திர பராமரிப்பு பணிகளுக்காக கடந்த 13ஆம் தேதி மின் உற்பத்தி நிறுத்தப்பட்ட நிலையில் இன்று மீண்டும் உற்பத்தி தொடங்கியுள்ளது

தற்போது 300 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு படிப்படியாக இன்றுமாலைக்குள் ஆயிரம் மேகாவாட்டை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

ழுழுழுழுழுழுழுழுழு

**புதுக்கோட்டை**

புதுக்கோட்டை மாவட்டத்தில் சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறையில் பசுமை பள்ளி திட்டத்தின் கீழ் 12 பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

ழுழுழுழுழுழுழுழுழு

**அமீபா**

கேரள மாநிலத்தில் அமீபா வைரஸ் நோய் பரவிவரும் நிலையில் குடிநீரை காய்ச்சி பருகுவதன் மூலம் இத்தாக்குதலில் இருந்து மக்கள் தங்களை தற்காத்துக்கொள்ள முடியும் என்று தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை நுண்ணுயிர் பிரிவு பேராசிரியர் டாக்டர் ஜெயமுருகன் கூறியுள்ளார்.

**வாய்ஸ்**

இதனிடையே இந்த அமீபா வைரஸ் குறித்து பொதுமக்கள் அச்சப்பட தேவையில்லை என்றும், உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர் ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழு

**இருவரி**

**நாகை மாவட்டத்தில் பிரதமரின் பயிர்** காப்பீட்டுத்திட்டத்தில் விவசாயிகள் குறுவை பயிர்களுக்கு வரும் 31ஆம் தேதிக்குள் காப்பீடு செய்து பயன்பெறுமாறு ஆட்சித்தலைவர் திரு.ஜானி டாம் வர்க்கீஸ் கூறியுள்ளார்.

**நாமக்கல் மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட** புகையிலை பொருட்கள் விற்பனையை தடுப்பதற்கான நடவடிக்கைகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்படுவதாக ஆட்சித்தலைவர் டாக்டர் உமா தெரிவித்துள்ளார்.

விதிகளை மீறியவர்களிடமிருந்து சுமார் 43 லட்சம் ரூபாய் அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

**மதுரை மற்றும் திருமங்கலம் கல்வி** மாவட்டங்களுக்கு 2 ஆயிரத்து 855 கையடக்க கணினிகளை மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சங்கீதா ஆசிரியர்களுக்கு இன்று வழங்கினார்.

**கோவை வேளாண் பல்கலைகழக தொலைதூர** கல்வியில் 4 புதிய பட்டய படிப்புகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக இதன் துணைவேந்தர் முனைவர் கீதா லெட்சுமி தெரிவித்துள்ளார்.

தோட்டக்கலை செடிகள் வளர்க்கும் தொழில்நுட்பம்,

தோட்டக்கலை பயிர் சாகுபடி,

செயற்கை நுண்ணறிவுடன் வேளாண்மையில் இணையவழி தொழில்நுட்பம்,

ஆளில்லா ட்ரோன் தொழில்நுட்பம் ஆகிய பிரிவுகளில் வழங்கப்படும் பட்டயப்படிப்பில் சேர விரும்புவோர் அடுத்த மாதத்திற்குள் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ஆதி திராவிடர்** நல விடுதிகளில் சேர்வதற்கு தகுதியுடைய மாணாக்கர் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

**அரியலூர் மாவட்டம் கங்கை கொண்ட** சோழபுரத்தில் ஆடித்திருவாதிரை விழா அடுத்த மாதம் 2ஆம் தேதி கொண்டாடப்பட உள்ள நிலையில் அதற்கான முன்னேற்பாடுகள் குறித்து ஆட்சித்தலைவர் திருமதி ஆனி மேரி ஸ்வர்ணா இன்று ஆலோசனைகளை மேற்கொண்டார்.

ழுழுழுழுழுழுழுழுழு

**நீர்வரத்து**

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக கர்நாடக அணைகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளதை அடுத்து தமிழக எல்லை பகுதியான பிலிகுண்டுலுவிற்கு நீர்வரத்து ஐந்தாயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

இதனையடுத்து ஒகேனக்கல் காவிரி ஆற்றிலும் ஐந்தாயிரம் கன அடி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது.

ழுழுழுழுழுழுழுழுழு

**கிரிக்கெட்**

இந்திய - ஸிம்பாப்வே அணிகளுக்கிடையேயான 3ஆவது 20-20 கிரிக்கெட் போட்டி நாளை மறுநாள் ஹராரேயில் நடைபெற உள்ளது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்று சம நிலையில் உள்ளன.

ழுழுழுழுழுழுழுழுழு

**மகளிர் கிரிக்கெட்**

இந்திய - தென்னாப்பிரிக்க அணிகளுக்கு இடையேயான 3-வது இறுதி மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டி சென்னையில் நாளை நடைபெறுகிறது.

ழுழுழுழுழுழுழுழுழு

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

ழுழுழுழுழுழுழுழுழு